# ஜனவரி – 25 – வெள்ளி

## புனித பவுல் அடிகள் மனந்திரும்புதல்

**பிற இனத்தாரே! நீங்கள் அனைவரும் ஆண்டவரைப் போற்றுங்கள்! திபா. 117:1**

**முதல் வாசகம் : (வாசகம் வேறுபடலாம்)**
**திருத்தூதர் பணி 22 : 3 – 16**

பவுல் மக்களை நோக்கிக் கூறியது: நான் ஒரு யூதன் சிலிசியாவிலுள்ள தர்சு நகரத்தில் பிறந்தவன் ஆனால் இந்த எருசலேம் நகரில் வளர்க்கப்பட்டவன் கமாலியேலின் காலடியில் அமர்ந்து நம் தந்தையரின் திருச்சட்டங்களில் நுட்பமாகப் பயிற்சி பெற்றவன் நீங்கள் அனைவரும் இன்று கடவுள் மீது ஆர்வம் கொண்டுள்ளது போன்று நானும் கொண்டிருந்தேன். கிறிஸ்தவ நெறியைச் சேர்ந்த ஆண்களையும் பெண்களையும் கட்டிச் சிறையிலடைந்தேன் சாகும் வரை அவர்களைத் துன்புறுத்தினேன். தலைமைக் குருவும் மூப்பர் சங்கத்தாரும் இதற்குச் சாட்சி. இவர்களிடமிருந்து தமஸ்கு நகரிலுள்ள சகோதரர்களுக்குக் கடிதங்களைப் பெற்றுக் கொண்டு அங்குள்ள கிறிஸ்தவர்களைக் கட்டி எருசலேமுக்குக் கொண்டு வந்து தண்டிப்பதற்காக அங்குச் சென்றேன். நான் புறப்பட்டுத் தமஸ்கு நகரை நெருங்கியபோது நண்பகல் நேரத்தில் திடீரென வானிலிருந்து ஒரு பேரொளி என்னைச் சூழ்ந்து வீசியது. நான் தரையில் விழுந்தேன். அப்போது, "சவுலே, சவுலே நீ ஏன் என்னைத் துன்புறுத்துகிறாய்?" என்ற குரலைக் கேட்டேன். அப்போது நான், "ஆண்டவரே நீர் யார்?" என்று கேட்டேன். அவர், "நீ துன்புறுத்தும் நாசரேத்து இயேசு நானே" என்றார். என்னோடிருந்தவர்கள் ஒளியைக் கண்டார்கள் ஆனால் என்னோடு பேசியவரது குரலைக் கேட்கவில்லை. ஆண்டவரே, நான் என்ன செய்ய வேண்டும்?" என நான் கேட்க, ஆண்டவர் என்னை நோக்கி, "நீ எழுந்து தமஸ்குவுக்குச் செல். நீ செய்வதற்கென குறிக்கப்பட்டுள்ளவை அனைத்தும் அங்கே உனக்குக் கூறப்படும்" என்றார். அந்த ஒளியின் மிகுதியால் நான் பார்க்க முடியவில்லை. என்னோடியிருந்தவர்கள் எனது கையைப் பிடித்துத் தமஸ்குவினுள் அழைத்துச் சென்றார்கள். அங்கு அனனியா என்னும் ஒருவர் இருந்தார். அவர் திருச்சட்டத்தைக் கடைப்பிடித்து கடவுளுக்கு அஞ்சி வாழ்ந்தவர் அங்கு வாழ்ந்து வந்த யூதர் அனைவரிடமும் நற்சான்று பெற்றவர். அவர் என்னிடம் வந்து அருகில் நின்று, "சகோதரர் சவுலே, மீண்டும் பார்வையடையும்" என்றார். அந்நேரமே நான் பார்வை பெற்று அவரைப் பார்த்தேன். அப்போது அவர், "நம் மூதாதையரின் கடவுள் தம் திருவுளத்தை அறியவும் தம் நேர்மையாளரைக் காணவும் தம் வாய்மொழியைக் கேட்கவும் உம்மை ஏற்படுத்தியுள்ளார். ஏனெனில், நீர் கண்டவைகளுக்கும் கேட்டவைகளுக்கும் அனைவர் முன்பும் நீர் சாட்சியாய் இருக்க வேண்டும். இனி ஏன் காலம் தாழ்த்த வேண்டும்? எழுந்து அவரது திருப்பெயரை அறிக்கையிட்டு உமது பாவங்களிலிருந்து கழுவப் பெற்றுத் திருமுழுக்குப் பெறும்" என்றார்.

**பதில்பாடல் :** உலகெங்கும் சென்று படைப்புக்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்.

**நற்செய்தி : மாற்கு 16 : 15 - 18**

அக்காலத்தில் இயேசு அவர்களை நோக்கி, "உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள். நம்பிக்கை கொண்டு திருமுழுக்குப் பெறுவோர் மீட்புப் பெறுவர் நம்பிக்கையற்றவரோ தண்டனைத் தீர்ப்புப் பெறுவர். நம்பிக்கை கொண்டோர் பின்வரும் அரும் அடையாளங்களைச் செய்வர் அவர்கள் என் பெயரால் பேய்களை ஓட்டுவர் புதிய மொழிகளைப் பேசுவர். பாம்புகளைத் தம் கையால் பிடிப்பர். கொல்லும் நஞ்சைக் குடித்தாலும் அது அவர்களுக்குத் தீங்கு இழைக்காது. அவர்கள் உடல் நலமற்றோர்மீது கைகளை வைக்க, அவர்கள் குணமடைவர்" என்று கூறினார். இவ்வாறு அவர்களோடு பேசிய பின்பு ஆண்டவர் இயேசு விண்ணேற்றமடைந்து கடவுளின் வலப்புறம் அமர்ந்தார்.

**தியானம்:** மண்ணும் மரமும் இந்த உலகத்தில் இருந்து மறைவதுபோல மனிதர்களும் இருந்து மறைவதற்காக உருவாக்கப்படவில்லை மாறாக கடவுள் ஒவ்வொருவருக்கென தனிப்பட்ட திட்டத்தை வகுத்து அதனை நிறைவேற்றவே அவர்களை இந்த உலகத்திற்கு அனுப்பி வைத்திருக்கின்றார். இறைவனுடைய திட்டத்தை அந்த மனிதர் நிறைவேற்றும் வரை கடவுள் அவனை விட்டுவிடுவதில்லை என்பதைத்தான் இன்றைய திருநாள் நமக்குச் சுட்டிக்காட்டுகின்றது. "தாயின் வயிற்றில் இருந்தபோதே என்னைத் தமக்கென ஒதுக்கிவைத்துத் தமது அருளால் என்னை அழைத்த கடவுள், தம் மகனைப்பற்றிய நற்செய்தியைப் பிற இனத்தவர்க்கு நான் அறிவிக்குமாறு அவரை எனக்கு வெளிப்படுத்தத் திருவுளம் கொண்டார்" (கலா.2:5-16), "தம் முன்குறித்து வைத்தோரை அழைத்திருக்கிறார், தம் அழைத்தோரைத் தமக்கு ஏற்புடையோராக்கி இருக்கிறார், தமக்கு ஏற்புடையோரானோரைத் தம் மாட்சியில் பங்கு பெறச் செய்தார்" (உரோ 8:30) என்ற இறைவார்த்தைகளுக்கு ஏற்ப கடவுளால் முன்குறிக்கப்பட்டு அவருக்காக உழைக்க, அவரது மாட்சியை இந்த உலகத்திற்கு எடுத்துக்காட்ட அழைக்கப்பட்டவர்தான் தூய பவுலடியார். எந்த ஒரு மனிதன் தேவனுடைய சித்தத்தை தனது வாழ்வில் தெரிந்து கொண்டு அதனை நிறைவேற்றுகின்றானோ அவனே கடவுளுக்கு உகந்த வாழ்க்கை வாழ்பவன். மருத்துவராக, ஆசிரியராக, அறிஞர்களாக இன்னும் பல துறைகளிலும் தங்களுடைய திறமைகளை வெளிப்படுத்தி உலகத்தில் தங்களை நிலைநிறுத்திக் கொள்ள வேண்டும் என்று துடிப்பவர்களில் கடவுளுக்காக தங்களை அர்ப்பணித்து அவருடைய பணியை தங்களுடைய வாழ்வாக மாற்றிக் கொண்டவர்களுள் முதன்மையாக விளங்குபவர்தான் தூய பவுலடியார். "உண்மையில் என்னைப் பொறுத்தமட்டில் என் ஆண்டவராம் கிறிஸ்து இயேசுவைப் பற்றிய அறிவே நான் பெறும் ஒப்பற்ற செல்வம். இதன் பொருட்டு மற்ற எல்லாவற்றையும் இழப்பாகக் கருதுகிறேன். அவர் பொருட்டு அனைத்தையும் இழந்துவிட்டேன். கிறிஸ்துவை ஆதாயமாக்கிக் கொள்ள எல்லாவற்றையும் குப்பையாகக் கருதுகின்றேன்" (பிலி.3:8) என்று சொல்லி தனது படிப்பு, பட்டம், அதிகாரம், சமூக அந்தஸ்து எல்லாவற்றையும் தூக்கி எறிந்துவிட்டு இயேசுவைப் பின்பற்றியவர் தூய பவுலடியார். "நற்செய்தியை அறிவிக்காவிடில் ஐயோ எனக்குக் கேடு. இதை நானாக விரும்பாவிட்டாலும் இது என்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்பாக இருக்கிறது" (1கொரி.9:16-17) என்று சொல்லி அல்லும் பகலும் அந்த இறைவார்த்தையை மக்களுக்கு கொண்டு செல்வதற்காகவே தனது உடல் பொருள் ஆவி அனைத்தையும் அர்ப்பணித்து வாழ்ந்தவர்தான் தூய பவுலடியார். அவரால் திருச்சபைகள் உருவாக்கப்பட்டன, திருச்சபையின் படிப்பினைகள் உருவாகின, அவரது கடிதங்களால் கிறிஸ்துவின் மறைபொருள்கள் விளக்கப்பட்டன. கிறிஸ்துவுக்காகவே வாழ்ந்த அவர் இன்றும் மறையாமல் நம் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார். அவரைப்போல நாமும் நமது வாழ்வை கிறிஸ்துவுக்காக அர்ப்பணிக்கத் தயாரா?